

# TNPSC GROUP-4 மாதிரி வினாவிடை

## புவியியல் (Geography)

*131. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை காண்க.*

I. நீர், நிலத்திலிருந்து வளிமண்டலத்தை அடைந்து மீண்டும் நிலத்தை அடையும் செயல் நீர் சுழற்சியாகும்.
II. பேராழியின் சமவெளி பகுதி அகழியாகும்.
III. புவியில் உள்ள பேராழிகள், ஏரிகள், ஆறுகளில் உள்ள நீர் புவியின் வெப்ப ஆற்றலால் ஆவியாகின்றன.

*சரியான விடையளி:*

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி
(D) I மற்றும் III சரி

*132. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் உப்பளவு மிக அதிகமாக உள்ள பேராழி எது?*

(A) கரீபியன் பேராழி
(B) சாக்கடல்
(C) வங்காள விரிகுடா
(D) அட்லாண்டிக் பேராழி

*133. கீழ்க்கண்டவற்றை ஆராய்க.*

*கூற்று (A): ஸ்ட்ராட்டோஸ்பியர் அடுக்கில் நீராவி மிக அடர்த்தியாக காணப்படுகிறது.*
*காரணம் (R) : வளிமண்டல அடுக்குகளில் ஸ்ட்ராட்டோஸ்பியர் இரண்டாவது அடுக்காகும்.*
*சரியான விடையளி:*

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால், (R) சரி

*134. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியானது?*

(A) O2 என்பது ஓசோனின் வாய்பாடு
(B) சூரியனில் அதிகளவு ஹீலியமும் குறைந்த அளவு ஹைட்ரஜனும் உள்ளன
(C) வளிமண்டலத்தின் 3வது அடுக்கு மீஸோஸ்பியர்
(D) வளிமண்டல அடுக்குகளில் ஓசோன் வாயு தெர்மாஸ்பியர் மற்றும் எக்ஸ்ஸோஸ்பியர் அடுக்குகளில் அதிகளவு பரவியுள்ளது.

*135. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியானது?*

I) வளிமண்டலத்தின் முதல் அடுக்கு ஸ்ட்ராட்டோஸ்பியர்
II) ஓசோன் படலம் ஸ்ட்ராட்டோஸ்பியரில் காணப்படுகிறது.
III) நாக்டிலூசன்ட் மேகங்கள் மீசோஸ்பியரில் காணப்படுகின்றன

*சரியான விடையளி:*

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) I சரி II தவறு
(D) II மற்றும் III சரி

*136. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது தவறானது?*

(A) பூமியின் மையப்பகுதியில் உருகிய உலோகக் குழம்பு காணப்படுகிறது
(B) இங்கு சுமார் 5000°C & 6000°C செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது
(C) இரும்பு, நிக்கல் போன்ற உலோகங்கள் இந்தப் பகுதியில் செறிவாக உள்ளன
(D) பூமியின் 85% கனிமப்பொருட்கள் இந்தப் பகுதியில் தான் உள்ளன

*137. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது மந்த வாயுக்கள்?*

(A) நைட்ரஜன்
(B) ஆக்ஸிஜன்
(C) குளோரா்புளூரோ கார்பன்
(D) ஹீலியம்

*138. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க:*

I) வானிலை மூலங்களான வெப்பநிலை, காற்று, காற்றின் அழுத்தம், மேகங்களின் உருவாக்கம் மற்றும் மழைப்பொழிவு ஆகிய அனைத்து மாற்றங்களும் மீவளி அடுக்கில் நடைபெறுகின்றன.
II) ஜெட் விமானங்கள் அடி அடுக்கில் தான் பயணிக்கின்றன
III) வளிமண்டலத்தின் குளிர்ச்சியான அடுக்கு, இங்கு சேணிடை அடுக்கு வெப்பம் & 900°C அளவுக்கு இருக்கிறது.

(A) I, II மற்றும் III
(B) II மற்றும் III
(C) I மற்றும் II
(D) அனைத்தும்

*139. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க:*

I) துருவப் பகுதிகளில் சூரியனின் நேர்க்கதிர்களாகப் பெறுகின்றன.
II) உயரமான பகுதிகளில் அமைந்துள்ள இடங்கள் சமவெளிப் பகுதிகளை விட வெப்பம் அதிகமாகக் காணப்படுகின்றன.
III) கடலானது தாமதமாக வெப்பமடைந்து, கிரகித்த வெப்பத்தினை வெளியிட நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும்.

(A) I மற்றும் III
(B) II மற்றும் III
(C) I மற்றும் II
(D) அனைத்தும்

*140. ____________ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.*

(A) புவி
(B) வளிமண்டலம்
(C) காலநிலை
(D) சூரியன்

*141. புவி பெறும் ஆற்றல்?*

(A) நீரோட்டம்
(B) மின்காந்த அலைகள்
(C) அலைகள்
(D) வெப்பம்

*142. எல்நினோ என்பது?*

(A) ஆண்டுதோறும் காணப்படும் பருவக்காற்று
(B) பல ஆண்டுகளாக தொடரும் பருவமழை
(C) ஆண்டுத்தோறும் நிலவும் வானிலை நிகழ்வு
(D) 5 முதல் 10 வருடங்களுக்கு ஒருமுறை காணப்படும் ஒரு வானிலை நிகழ்வு

*143. இந்தியாவின் குளிர்காலத்தில் (டிசம்பர் & பிப்ரவரி) சூரியனின் செங்குத்து கதிர்கள் கீழ்க்கண்ட எவற்றின் மீது விழுகின்றது?*

(A) மகரரேகை (B) கடகரேகை
(C) வட அட்சம் (D) தென் அட்சம்

*144. கீழ்க்கண்டவற்றை ஆராய்க.*

*கூற்று (A): காலநிலையில் ஏற்படும் வேறுபாடு, வேளாண்மையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.*
*காரணம் (R): காலநிலையில் ஏற்படும் மாற்றத்தினால் புவியியல் பகல் இரவும் புவி வெடிப்பும் ஏற்படுகின்றன.*
*சரியான விடையளி:*

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால் (R) சரி

*145. கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது தவறானது?*

(A) காலநிலை என்பது நீண்டகாலத்தில் பெரிய பரப்பளவில் காணப்படும் வானிலையின் சராசரி.
(B) ஒரு சராசரி காலம் என்பது 30 ஆண்டுகள்.
(C) காலநிலை என்ற சொல் கிளைமா என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
(D) வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் மழையளவை தீர்மானிப்பதாகும்.

*146. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க.*

*கூற்று (A) : வளிமண்டலத்தின் உயரே செல்ல செல்ல வெப்பநிலை குறையும்.*
*காரணம் (R): மேலே எழும்பும் காற்றின் வெப்பநிலை குறைந்து காணப்படும்.*

*சரியான விடையளி:*

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல.
(C) (A) தவறு ஆனால் (R) சரி
(D) (A) சரி ஆனால் (R) தவறு

*147. கீழ்க்காணும் கூற்றுகளில் எது/எவை தவறானது?*

I) பருவ கால மாற்றங்கள் ஏற்படுத்தும் வாயு மண்டல அடுக்கு டிரோபோஸ்பியர்.
II) ஆகாய விமானம் பறக்க ஏதுவான பகுதி மீசோஸ்பியர்
III) ஓசோன் என்ற வடிகட்டும் மண்டலம் அமைந்துள்ள பகுதி - ஸ்டிரோடோஸ்பியர்.
IV) வாயு மண்டலத்தின் எல்லையாக செயல்படும் மண்டலம் - அயனோஸ்பியர்.

சரியான விடையளி:

(A) II, IV மட்டும் தவறு
(B) I, II மட்டும் தவறு
(C) III, IV மட்டும் தவறு
(D) II, III மட்டும் தவறு

*148. கீழ்க்காணும் கூற்றினை ஆராய்க.*

I) வெப்பமான இடங்களில் வளிமண்டல அழுத்தம் குறைவாக இருக்கும்.
II) குளிர்ச்சியான இடங்களில் காற்றின் அழுத்தம் அதிகம்.

சரியான விடையளி:

(A) I மற்றும் II சரி
(B) I சரி II தவறு
(C) I தவறு II சரி
(D) I மற்றும் II தவறு

*149. எந்த வாயு வளிமண்டலத்தில் அதிக அளவில் உள்ளது?*

(A) ஹைட்ரஜன்
(B) உயிர் வாயு
(C) நீராவி (D) நைட்ரஜன்

*150. கொடுக்கப்பட்டுள்ள வடஅமெரிக்காவைச் சுற்றி யுள்ள கடல் நீரோட்டங்கள் படத்தை கருத்தில் கொள்க. வரிசை I வரிசை II பொருத்தி, சரியான குறியீடு உள்ள பதிலைத் தேர்ந்தெடுக்க:*

| வரிசை I (நீரோட்ட எண்) | | வரிசை II (நீரோட்டத்தின் பெயர்) |
|---|---|---|
| (A) I | - | 1) அலாஸ்கா |
| (B) II | - | 2) கல்ஃப் நீரோட்டம் |
| (C) III | - | 3) கலிபோர்னியா |
| (D) IV | - | 4) லப்ராடார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

*151. கடலின் வெப்பநிலைக்கு மிக முக்கிய பங்கு வகிக்கும் காரணி எது?*

(A) நிலா (B) சூரியன் (C) மேக்மா
(D) அணுமின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர்

*152. கண்டங்களின் ஓரங்களில் இருக்கும் கடலின் உவர்ப்புத் தன்மை குறைவாக இருப்பதற்கான காரணம்?*

(A) உவர்ப்பு நீர் அதிகமாக சேர்வதால்
(B) நன்னீர் கலப்பதால்
(C) அதிகப்படியான ஆவியாதல்
(D) குறைந்த அளவு ஆவியாதல்

*153. கீழ்க்கண்ட ஆப்பிரிக்க வரைபடத்தை அடிப்படையாக கொண்டு வரிசை I வரிசை II பொருத்தி, சரியான குறியீடு உள்ள பதிலைத் தேர்ந்தெடுக்க:*

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| (A) I | - | 1) நமிப் பாலைவனம் |
| (B) II | - | 2) சகாரா பாலைவனம் |
| (C) III | - | 3) கெனரி நீரோட்டம் |
| (D) IV | - | 4) பெங்குலா நீரோட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

*154. கீழ்க்கண்ட வாக்கியங்கள் எந்த அடுக்கைப் பற்றி கூறுகிறது?*

1) அடுக்குகளில் மிகவும் குளிர்ந்த வெப்பநிலை கொண்டது.
2) விண்வெளி மாசு துகள்கள் மற்றும் ஒளிர் மேகங்கள் காணப்படும்.

மேலே உள்ள அறிக்கைகள் வளிமண்டலத்தின் எந்த அடுக்கைக் குறிக்கின்றன.

(A) படையடுக்கு
(B) அடியடுக்கு
(C) அயன அடுக்கு
(D) இடையடுக்கு

*155. அனைத்து பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட ஒரே கடல் ____________*

(A) சாக்கடல்
(B) சர்காஸோ கடல்
(C) தென் சீனக்கடல்
(D) ஏரல் கடல்

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 131-D | 132-B | 133-D | 134-C | 135-D |
| 136-D | 137-D | 138-D | 139-C | 140-C |
| 141-D | 142-D | 143-A | 144-C | 145-D |
| 146-B | 147-A | 148-A | 149-D | 150-D |
| 151-B | 152-B | 153-B | 154-D | 155-B |

*தொகுப்பு: ஆர்வம் ஐஏஎஸ் அகாடமி - சென்னை*

தொடரும் - 49